HSS

# அரையாண்டுத் தேர்வு - 2024

9 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :-** 14 X 1 = 14

1. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ………… ஆவர்.
   அ) ஹோமோஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ் இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்
2. எகிப்தியர்கள் இறந்த உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்த முறை ………… .
   அ) சர்கோபகஸ் ஆ) ஹைக்சோஸ் இ) மம்மியாக்கம் ஈ) பல கடவுளர்களை வணங்குதல்
3. 1. பௌத்த மதம் ஜப்பானில் இருந்து சீனாவிற்கு பரவியது
   2. இயேசு கிருஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்னர் புனித தோமையார் கிறிஸ்தவ கொள்கையைப் பரப்பினார்.
   3. ஐரோப்பாவில் புனித சோபியா ஆலயம் மிக நேர்த்தியான கட்டடம் ஆகும்.
   4. டிராஜன், ரோமின் மோசமான சர்வாதிகாரிகளில் ஒருவராவர்.
   அ) (1) சரி ஆ) (2) சரி இ) (3) சரி ஈ) (4) சரி
4. ஸ்பெயினைக் கைப்பற்றிய அராபிய தளபதி ……………… .
   அ) தாரிக் ஆ) அலாரிக் இ) முகமது என்னும் வெற்றியாளர் ஈ) சாலடின்
5. பசிபிக் பெருங்கடல் எனப் பெயரிட்டவர் ………… .
   அ) கொலம்பஸ் ஆ) அமெரிகோ வெஸ்புகி இ) ஃபெர்டினாண்ட் மெகெல்லன் ஈ) வாஸ்கோடகாமா
6. பாறைக் குழம்பு காணப்படும் அடுக்கு ……………… .
   அ) புவி மேலோடு ஆ) கருவம் இ) கவசம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
7. ஒவ்வோர் ஆண்டும் உலக மக்கள் தொகை தினம் …………… ஆம் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது
   அ) ஆகஸ்ட் 11 ஆ) செப்டம்பர் 11 இ) ஜூலை 11 ஈ) ஜனவரி 11
8. உலக அமைவிடத்தை கண்டறியும் தொகுதியில் (Gps) பயன்படுத்தப்படும் செயற்கைக் கோள்கள்
   அ) 7 ஆ) 24 இ) 32 ஈ) 64
9. மக்களாட்சியில் இறுதி அதிகாரம் பெற்றவர்கள்
   அ) நாடாளுமன்றம் ஆ) மக்கள் இ) அமைச்சரவை ஈ) குடியரசுத் தலைவர்
10. இன ஒதுக்கல் (Aparthied) என்னும் கொள்கையைப் பின்பற்றிய நாடு ………… .
    அ) தென் சூடான் ஆ) தென் ஆப்பிரிக்கா இ) நைஜீரியா ஈ) எகிப்து
11. ………… காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது
    அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்
12. சார்க் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று
    அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) சீனா ஈ) பூடான்
13. பின்வருவனவற்றுள் எது முதன்மை துறை சார்ந்ததல்ல?
    அ) வேளாண்மை ஆ) உற்பத்தி இ) சுரங்கத் தொழில் ஈ) மீன் பிடித்தல்
14. தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை பொழியும் மாதங்கள்
    அ) ஆகஸ்ட் - அக்டோபர் ஆ) செப்டம்பர் - நவம்பர் இ) அக்டோபர் - டிசம்பர் ஈ) நவம்பர் - ஜனவரி

**II ஏதேனும் 10 வினாக்களுக்கு குறுகிய விடையளிக்கவும். (வினா எண். 28 கட்டாய வினா).** 10X2=20

15. சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாயணங்கள் எந்தளவுக்கு ஒரு முக்கியமான சான்றாக உள்ளன?
16. மும்மணிகள் (திரி ரத்னா) இச்சொல்லை விளக்கிக் கூறுக.
17. மறுமலர்ச்சியின் விளைவுகள் பற்றி ஒரு சிறுகுறிப்பு வரைக.
18. பிரான்சின் மூன்று (Three Estate) வர்க்கங்களின் அமைப்புப் பற்றி எழுதுக.
19. புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

20. வானிலை சிதைவு வரையறு.

21. மக்கள் அடர்த்தி என்றால் என்ன?

22. தொலை நுண்ணுணர்வு வரையறு.

23. ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறைக் கூறுக.

24. போக்சோ (Pocso) வரையறு.

25. கிராம ஊராட்சிகளின் முக்கிய பணிகள் யாவை?

26. சூரிய சக்தி என்றால் என்ன?

27. சிறு மற்றும் குறு விவசாயிகளை வேறுபடுத்துக.

28. இயற்கைப் பணம் என்றால் என்ன?

**III ஏதேனும் 10 வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.**
**(வினா எண். 42 கட்டாயம் விடை அளிக்கவும்).** 10 X 5 = 50

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) மௌரியர் காலத்தில் ஆட்சி கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் .......... ஆகும்.

2) ......... தீர்த்தங்கரர்கள் நீண்ட மரபில் வந்தவர் என்றும் 24 ஆவது மற்றும் கடைசி தீர்த்தங்கரர் என்றும் சமணர்கள் நம்புகிறார்கள்.

3) பாலைவன பல்லுயிரித் தொகுதிகளில் வளரும் தாவரங்கள் ............. எனப்படும்.

4) தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படும் நாள் .......... .

5) தமிழக மக்களின் பெரும்பான்மையினர் .......... தொழிலையே சார்ந்திருக்கின்றர்.

30. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடையது தெளிவுபடுத்துக.

31. புவியியல் சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆராய்க.

32. 1789 ஆம் ஆண்டு புரட்சிக்கு பிரெஞ்சு தத்துவஞானிகளின் பங்களிப்பினை விளக்கவும்.

33. **வேறுபடுத்துக.**

அ) கருவம் மற்றும் மேலோடு ஆ) புவி மாதிரி மற்றும் நில வரைபடம்

**காரணம் கூறு.**

இ) உயிர்கோளம் ஒரு நிலையான சூழல் மண்டலத்தைக் கொண்டுள்ளது.

34. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.

35. வானிலைச் சிதைவு என்றால் என்ன? வகைப்படுத்துக.

36. புவி அமைப்பை விவரி.

37. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?

38. உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள் மற்றும் சவால்கள் யாவை?

39. புதுப்பிக்கத்தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்க தகாத வளங்கள் - வேறுபடுத்துக.

40. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரி.

41. காலக்கோடு 1780 முதல் 1800 வரை ஏதேனும் ஐந்து உலக வரலாற்று நிகழ்வுகளை எழுதுக.

42. **கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**

அ) டெல்லி ஆ) மதுரை இ) சென்னை ஈ) விஜயநகர் உ) வங்காளம்

**IV அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும் :-** 2 X 8 = 16

43. அ) "தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னத காலம்" விளக்கவும். ***(அல்லது)***

ஆ) சமண புத்த சமயக்கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் எழுதுக.

44. **கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும் :-**

1. பசிபிக் நெருப்பு வளையம் 2. இமயமலை 3. இங்கிலாந்து 4. டென்மார்க் 5. ஹுவாங்கோ ஆறு 6. குளிர்ப்பாலைவனம் 7. வட அமெரிக்க 8. இந்தியப் பெருங்கடல் ***(அல்லது)***

1. கங்கை டெல்டா 2. ஆஸ்திரேலியா 3. சீன நாகரீகம் 4. செங்கடல் 5. ஆசியா 6. ஆல்ப்ஸ் மலைத்தொடர் 7. வெப்ப பாலைவனம் 8. ஆப்பிரிக்கா